**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.</u>**
**<u>அசல் வழக்கு எண்.110/2013</u>**

பெயர்–திருமதி.தேன்மொழி நாள்.20.01.2026

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.1 : 2, 6, 8, 9, 11 முதல் 13 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

1) தாவா சொத்து ஆதியில் எனது மாமனார் வகையில் பட்டா வகையில் பாத்தியப்பட்டிருந்து என்று பதில் அளித்துள்ள நிலையில், பட்டாவை நான் பார்வையிட்டேனா என்றால், இல்லை. எனது கணவர்தான் பராமரித்து வந்தார். அவருக்குத்தான் தெரியும். வழக்குரை பாரா 4–ல் 1–ம் பிரதிவாதிக்கு கடந்த 16.12.2008– தேதியில் எனது கணவருக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்த விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால், தெரியும். தானசெட்டில்மெண்ட் எழுதியபோது, நான் உடன் இருந்தேனா என்றால், இல்லை. நான் தாளவாடியில் இருந்தேன். மேற்படி தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின் அசலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், அசல் ஆவணம் வீடு கட்டுவதற்காக தனியார் நிதிநிறுவனத்தில் அடமானம் வைத்திருந்ததால், தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்துக்களை பொறுத்து, எனது மாமனார் உயிருடன் இருந்த வரையில் அனுபவித்து வந்தாரா என்றால், இல்லை. எனது கணவர்தான் விவாசயம் செய்து வந்தார். எனது கணவருக்கு தானசெட்டில்மெண்ட் எழுதியதுபோல், மற்ற வாரிசுகளுக்கு எனது மாமனார் சின்னசாமி ஆவணம் ஏற்படுத்தி வைத்துள்ளாரா என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. எனது மாமனாருக்கு வேறு சொத்துக்கள் உள்ளதா, எங்கு உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. எனது கணவர் பெயரில் தானசெட்டில்மெண்ட் ஏற்படுத்தப்பட்ட பிறகு, பட்டா மாறுதலின் உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. என்வசம் உள்ளது.

2) வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகத்தான், எனது கணவர் பெயரில் பட்டா மாறுதல் பெற்றுள்ளோம் என்றால், சரியல்ல. எனது கணவர் உயிருடன் இருந்த போதே பட்டா மாறுதல் பெற்றுவிட்டோம். எனது கணவர் மூன்றாம் நபரிடம் இருந்து எவ்வளவு கடன் வாங்கியுள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால், தெரியாது. தனியார் நிதிநிறுவனத்தில் ரூ.50,000/–ம் கடன் வாங்கியிருந்தார் என்பது மட்டும் எனக்கு தெரியும். நான்தான் வட்டிசெலுத்த செல்வேன். சுமார் 3 மாதம் வட்டி செலுத்தினோம், அதற்கு பிறகு எனது கணவர் இறந்துவிட்டார். அதற்கு பிறகு வட்டி செலுத்தினேனா என்றால், இல்லை.

ரூ.50,000/–ஐ 2, 3 பிரதிவாதிகளிடம் பத்திரத்தை மீட்க செலுத்தினேன். நான் நேரடியான பணத்தை நிதிநிறுவனத்தில் செலுத்தாததற்கு காரணம் என்ன என்றால், நான் விதவை என்பதால் ஏமாற்றி விடுவார்கள் என நினைத்து, 2, 3 பிரதிவாதிகளிடம் பணம் கொடுத்தேன். இந்த விவரத்தை இவ்வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால், இல்லை. எனது கணவர் அரசு பணியில் இருந்ததால், தனியார் நிதிதிறுவனத்தில் பணம் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றால், சரியல்ல. எனது கணவர் தனியர் நிறுவனத்தில்தான் வேலை செய்தார். கடனுக்கு ஆதரவாக கடனுறுதி சீட்டு எழுதிக் கொடுத்தாரா என்றால், ஆமாம். அந்த ஆவணத்தை நான் திரும்ப பெற்றுவிட்டேன். நான் 15.04.2013 தேதியில் முதல் அமைச்சர் தனி பிரிவிற்கு நான் புகார் அளித்துள்ளேன் என்றால், சரிதான். மேற்படி புகாரில், எனது கணவரின் அண்ணன் சேகர் மற்றும் ரவியிடம் பணம் செலுத்தியதாகவும், பத்திரத்தை மீட்டு தருமாறு குறிப்பிட்டுள்ளேன் என்றால், சரிதான். மேலும், பணத்தை கட்டி பத்திரத்தை மீட்டு சேகர், ரவி, ராஜேன்திரன் ஆகியோர்கள் வைத்துக்கொண்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால், சரிதான்.

**3)** மேற்படி அசல் ஆவணத்தை பெற்றுத்தர காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால், கொடுத்தேன். காவல் நிலையத்தில் அழைத்து விசாரித்து ஆவணங்களை என் வசம் கொடுக்க சொன்னார்கள். ஆனால், 2, 3 பிரதிவாதிகள் கொடுக்கவில்லை. அதை எதிர்த்து தனி புகார் ஏதேனும் குற்றவியல் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன். மேற்படி மனுவின் எண் விவரம் எனக்கு ஞாபகம் இல்லை. நான் சொல்வதுபோல் அசல் ஆவணங்கள் 2, 3 பிரதிவாதிகளிடம் இல்லை என்றால், சரியல்ல. அசல் ஆவணங்கள் அனைத்தும், எனது மாமனார் சின்னசாமியிடம் தான் இருந்தது என்றாலும், அதன் அடிப்படையில்தான் எனது கணவர் பெயரில் இருந்த தானசெட்டில் ஆவணத்தை ரத்து செய்துவிட்டு, 2–ம் பிரதிவாதி பெயரில் தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதப்பட்டது என்றால், சரிதான். எனது கணவர் இறந்தபிறகு, அவர் பெயரில் இருந்த ஆவணத்தை ரத்து செய்துவிட்டு, 2–ம் பிரதிவாதி பெயரில் ஆவணம் எழுதப்பட்டது.

**4)** 15.04.2013 புகாரில் எனது மகள் பிருந்தாவை 3, 4 பிரதிவாதிகள் சொத்திற்காக அழைத்து சென்றுவிட்டதாகவும், அவரை மீட்டு தருமாறு புகார் கொடுத்துள்ளேன் என்றால், சரிதான். பிருந்தா தனித்து சென்று திருமணம் செய்து கொண்டார் என்றால், இல்லை. எனது சம்மதத்தின் பெயரில்தான் திருமணம் செய்து கொண்டார். 3, 4 பிரதிவாதிகளுடன் இருந்த வரையில், பிருந்தா என்னுடன் சரியான பேச்சு வார்த்தையில் இல்லை. திருமணத்திற்கு பிறகு பேசி வருகிறார். எனது வழக்குரையில் பாரா–5–ல் 19.05.2013–ல் தாவா

பூமியை 2 முதல் 5 பிரதிவாதிகள் உழவு செய்ய வந்ததை தடுத்ததாக குறிப்பிட்டுளேன் என்றால், சரிதான். மேற்படி சம்பவம் குறித்து புகார் கொடுத்துள்ளோ என்றால், இல்லை. மேற்படி 19.05.2013 –ல் தகராறு செய்த தேதியில்தான், எனது கணவர் பெயரில் எழுதப்பட்டுள்ள தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்த விவரத்தை தெரிந்து கொண்டேன் என்றால், சரிதான். வழக்குரையில் 19.04.2013ல் சார்பதிவாளர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்து, பார்வையிட்டு, பத்திரம் ரத்து செய்த விவரங்களை தெரிந்து கொண்டதாக முரணமாக குறிப்பிட்டுள்ளேன் என்றால், சரியல்ல.

**2, 6, 8, 9, 11 முதல் 13 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வழக்கானது, மீண்டும் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA
Digitally signed by SELVAM SUSILA
Date: 2026.01.20 03:42:33 +0530

District Munsif